022

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNPA602– விசேட தேவைகள் சார் கல்வியில் தத்துவ மற்றும் சமூகவியல் அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 24.02.2024 | **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 4.30**

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. (அ) விசேட தேவைகள் சார் கல்வியின் வரலாற்று நோக்கினைச் சுருக்கமாக விளக்குக.

(30 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் இயலாமையுடைய மக்களின் பங்குபற்றலுக்கான உரிமைகளை ஊக்கப்படுத்தும் கொள்கைகள்/ சட்டங்கள்/ விதிமுறைகள் இரண்டினை (02) விவரிக்குக.

(30 புள்ளிகள்)

(இ) மேலே குறிப்பட்ட கொள்கைகள் / சட்டங்கள் / விதிமுறைகளை அமுல்படுத்தும் போது இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்து அப்பிரச்சினைகளை வெற்றி கொள்ளும் வகையில் பொருத்தமான முன்மொழிவுகளை முன்வைக்குக.

(40 புள்ளிகள்)

2. (அ) பின்வரும் தலைப்புக்களின் கீழ் கீழைத்தேய மற்றும் மேலைத்தேய கல்வித் தத்துவங்களைச் சுருக்கமாக ஆராய்க.

**a.** விசேட தேவைகள் சார் கல்வி தொடர்பான நோக்கு

**b.** விசேட தேவைகளுடைய மாணவர்களுடன் பணிபுரியும் ஆசிரியர்களின் வகிபங்கு

(40 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் விசேட தேவைகள் சார் கல்வி முறைமையில் கீழைத்தேய மற்றும் மேலைத்தேயக் கல்வித் தத்துவக் கருத்துக்களை எவ்வாறு பிரயோகம் செய்வீர என்பதை பொருத்தமான உதாரணங்களுடன் விவரிக்குக.

(40 புள்ளிகள்)

(இ) இலங்கையில் விசேட தேவைகள் சார் கல்வியில் காணப்படும் தற்காலச் செல்நெறிகள் மூன்றினை (03) விளக்குக.

(20 புள்ளிகள்)

3. "இயலாமைகள் உள்ள மக்களுக்கு எதிரான நிராகரிப்பு மிகவும் பாரதூரமான சமூக நீதிக்கு எதிரான ஒரு விடயமாகும். இதனைச் சமூகத்தால் பெற்றுக்கொள்ள முடியவில்லை." – (Marumoague, 2012)

(அ) இயலாமை என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.

(20 புள்ளிகள்)

(ஆ) தற்காலச் சமூகத்தில் இயலாமைகளையுடைய மக்கள் எதிர்கொள்ளும் தடைகள் குறைந்தது **ஐந்தினை** (05) விவரிக்குக.

**(40 புள்ளிகள்)**

(இ) நமது சமூகத்தில் இயலாமைகளையுடைய மக்கள் எதிர்கொள்ளும் நீங்கள் குறிப்பிட்ட தடைகளை வெற்றி கொள்வதற்கு பொருத்தமான பரிந்துரைகளை உருவாக்குக.

**(40 புள்ளிகள்)**

4. **"கேன் டாவின்** இயலாமையுடைய நபர்கள் வெற்றியடைவதற்கு ஏழு பகுதிகளால் நடைமுறை ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என 1990 இல் குறிப்பிட்டிருந்தார்."

(அ) கென் டாவினால் முன்வைக்கப்பட்ட நடைமுறைச் செயற்பாடுகளில் இலங்கையில் அமுல்படுத்தக்கூடிய **மூன்றினை** (03) விவரிக்குக.

**(30 புள்ளிகள்)**

(ஆ) மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொழுது இலங்கை அரசாங்கம் முகங்கொடுக்கும் சவால்களைப் பகுப்பாய்வு செய்க.

**(30 புள்ளிகள்)**

(இ) இலங்கையில் இயலாமையுடையோரின் நடைமுறைச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டிய பரப்புக்களில் மேம்படுத்த வழிகாட்டலை தயாரிக்குக.

**(40 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*